## அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில்

# ரூ.5.29 கோடியில் ஏரல் மருத்துவமனையில் 15 சுகாதார கட்டடங்கள்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. திறந்து வைத்தார்!



தூத்துக்குடி மாவட்டம் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை மூலம் ஏரல் அரசு சமூதாய நல மையத்தில் அஸ்வினி பிசரிஸ் பிரைவேட் லிமிடெட் சார்பில் ரூ.254 இலட்சம் மதிப்பீட்டில் பிரசவ அறை மற்றும் நவீன அறுவை சிகிச்சை மையம் கட்டுவதற்கான அடிக்கல்லை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதாஜீவன், மீன்வளம்மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர். அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் நேற்று (05.03.2025) நாட்டினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி.செ.அமிர்தராஜ், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, மேயர் பெ.ஜெகன், இயக்குநர், அஸ்வினி பிசரிஸ் பிரைவேட் லிமிடெட் எஸ்.கே.ஆறுமுகச்சாமி ஆகியோர் உள்ளனர்.

தூத்துக்குடி, மார்ச்.6-

தூத்துக்குடி மாவட்டம் ஏரல் அரசு சமுதாய நல மையத்தில் பிரசவ அறை மற்றும் நவீன அறுவை சிகிச்சை அரங்கம் கட்ட ரூ.2.54 கோடி CSR நிதி பங்களிப்பில் அடிக்கல் நாட்டப்பட்டு ரூ.5.29 கோடி செலவில் 12 புதிய சுகாதார கட்டிடங்களை கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் திறந்து வைத்தார்.

தூத்துக்குடி மாவட்டம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், ஏரல் அரசு சமுதாய நல மையத்தில் நேற்று (06.03.2025) அஸ்வினி பிஷ்ஷிங் பிரைவேட் லிமிடெட் ன் CSR நிதி பங்களிப்பில் ரூ.2. 54 கோடி மதிப்பில் ஏரல் அரசு சமுதாய நல மையத்தில் பிரசவ அறை மற்றும் நவீன அறுவை சிகிச்சை அரங்கம் கட்ட அடிக்கல் நாட்டுதல் மற்றும் ரூ.5.29 கோடி செலவில் 12 புதிய சுகாதார கட்டிடங்களை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதா ஜீவன், மீன் வளம்மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தெரிவித்ததாவது:

இந்த நிகழ்ச்சி என்பது எல்லோருக்கும் மன நிறைவை தரக்கூடிய ஒன்று. ஏறத்தாழ 12 புதிய கட்டடங்கள் மட்டுமில்லாமல் கோவில்பட்டி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டண பிரிவு கட்டிடம் ஆகியவை திறந்து வைக்கக்கூடிய நிகழ்ச்சிக்கு நம்முடைய மருத்துவத் துறை அமைச்சர் அவர்கள் வந்து கலந்து கொண்டு சிறப்பித்திருக்கின்றார்கள். தொடர்ந்து, தூத்துக்குடி மாவட்டத்திற்கான எந்த கோரிக்கையாக இருந்தாலும், அமைச்சர்களோ நானோ எதை கேட்டாலும் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அதை விரைவிலே மக்களுக்காக செய்து தரக்கூடிய மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை இந்த மேடையிலே என் தொகுதி மக்களின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களை தேடி மருத்துவம் என்ற திட்டத்திற்கு அமெரிக்காவின் மெக்சிகோ நகரில் நடைபெற்ற உலக நாடுகள் சம்மேளத்தின் மூலம் ஒரு பரிசு வழங்கப்பட்டு இருக்கிறது என்ற பெருமையான செய்தியை இன்று நமக்கு மருத்துவத்துறை அமைச்சர் தெரிவித்திருக்கிறார். நம் எல்லோருக்கும் தெரியும் இங்கு வாழக்கூடியவர்களுக்கு ஏதாவது ஒரு சொந்தம் வெளிநாடுகளில் இருக்கக்கூடிய சூழலை நாம் பார்த்து இருக்கிறோம். வெளிநாடுகளில் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு முன்பதிவு செய்த பிறகு தான் மருத்துவரை பார்க்க முடியும். அதேபோல் அவசர சிகிச்சை தேவைப்பட்டாலும் மணிகணக்கில் காத்திருக்க வேண்டிய சூழல் தான் நிகழும்.

ஆனால், தமிழகத்தை பொறுத்தவரை இன்று இரண்டு கோடி பேருக்கு மேல் அவர்களது வீடுகளுக்கே தேடி வந்து அரசாங்கம் மருத்துவ உதவிகளை செய்து தந்து உங்களுக்கு தேவையான மருந்துகளை தருவது மட்டுமில்லாமல் வீடுகளுக்கே தேடி வந்து பிசியோதெரபி சிகிச்சையும் தரப்படுகிறது. என்ற அளவிற்கு ஒரு திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நமக்காக வழங்கியிருக்கிறார்கள் அது தான் மக்களைத் தேடி மருத்துவம் என்ற உன்னத திட்டமாகும்.

பல நேரங்களில் வெளிநாடுகள் இருக்கக்கூடிய நண்பர்களோடு பேசும்பொழுது அவர்கள் மிக ஆச்சர்யத்தோடு பார்க்கக்கூடிய ஒரு திட்டம் தான் இந்த திட்டம். அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில் கூட இது போன்ற ஒரு திட்டம் கிடையாது. சில நாடுகளில் வயதானவர்களுக்கு அந்த வாய்ப்புகள் இருந்தாலும் அதற்கும் அவர்கள் பல மாதங்கள் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய திராவிட மாடல் ஆட்சி இந்த நாட்டிற்கு மட்டுமில்ல இன்றைக்கு பல நாடுகளுக்கும் முன்னுதாரணமாக இருக்கக்கூடிய ஒரு ஆட்சியாக, அது கல்வியாக இருக்கட்டும், மருத்துவ துறையாக இருக்கட்டும் எந்தத்துறையாக இருந்தாலும் அதில் பல்வேறு புதிய திட்டங்களின் வழியாக எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதை தன் தாரக மந்திரமாக கொண்டிருக்கக்கூடிய ஆட்சியாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் இரண்டு புதிய கட்டடங்களுக்கான அடிக்கல் இன்று நாட்டப்பட்டிருக்கிறது. அதில் ஒன்று ரூ.2.54 கோடி M/s. Asvini Fisheries Pvt Ltd., ன் CSR நிதி பங்களிப்பில் 9,125 சதுரடி பரப்பளவில் ஏரல் சமுதாய சுகாதார நிலையத்தில், புதிய கட்டிட தளத்தில் பிரசவ அறை, ஸ்கேன் அறை, பிரசவ கால கன்சல்டிங் அறை முதல் தளத்தில் அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் அறுவை சிகிச்சை பின் கவனிப்பு வார்டு மற்றும் ரூ.45 இலட்சத்தில் கரம்பாவிளை துணை சுகாதார நிலைய கட்டிடம் ஆகியவற்றிற்கு நாடாளுமன்ற உறுப்பினர் அடிக்கல் நாட்டியுள்ளார்.

அதேபோல், ரூ.5.29 கோடி செலவில் 12 மருத்துவ கட்டிடங்கள் மற்றும் கட்டண பிரிவு ஆகியவை திறந்து வைக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் ரூ.255.77 கோடி செலவில் 14 துணை சுகாதார நிலைய கட்டிடங்கள், 10 ஆரம்ப சுகாதார நிலையங்களில் புதிய கட்டிடங்கள், வட்டார பொது சுகாதார அலகுகளில் கூடுதல் கட்டிடம், கோவில்பட்டி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில், ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம், திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில், மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல விபத்து அவசர சிகிச்சை பிரிவு கட்டிடம், காயல்பட்டிணம் அரசு மருத்துவமனையில், புறநோயாளிகள் பிரிவு கட்டிடம் மற்றும் சிறப்பு வார்டு கட்டிடம், விளாத்திகுளம் அரசு மருத்துவமனையில், புதிய கட்டிடம், தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், பல்நோக்கு மருத்துவ பிரிவு கட்டிடம் ஆகிய 29 மருத்துவ கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், மாவட்டம் முழுவதும் ரூ.28.71 கோடி செலவில் பெரிலோவம்பட்டி, முதலூர் ஆகிய 2 ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்கள், கோவில்பட்டி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில், 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு, மேமோகிராம் கருவி, ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையில், கூடுதல் கட்டிடம், பிணவறை கட்டிடம், XRay மற்றும் டயாலிசிஸ் கருவி ஆகிய மருத்துவ கட்டிடங்கள் மற்றும் உயர் மருத்துவ உபகரணங்கள் போன்ற பணிகள் விரைவில் தொடங்கி வைக்கப்படவுள்ளது.

தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி, மாநிலம் முழுவதும் 708 நகர்ப்புற நல வாழ்வு மையம் கட்ட உத்தர விடப்பட்டது. தூத்துக்குடி மாவட்டத்தில் 17 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் (தூத்துக்குடி மாநகராட்சி 14 கோவில்பட்டி நகராட்சி - 2, காயல்பட்டினம் நகராட்சி 1) - ரூ.4.25 கோடி செலவில் கட்டிட பணிகள் நடைபெற்று வந்தது. இதில் முதலமைச்சர் அவர்கள் 06.06.2023 அன்று தூத்துக்குடி மாநகராட்சியில் 10 இடங்களில் திறந்து வைத்தார்.

மேலும் 7 இடங்களில் விரைவில் தொடங்கி வைக்கப்படும். ரூ.3.37 கோடி செலவில் தமிழகம் முழுவதும் இருதய நோயினால் ஏற்படும் உயிரிழப்பினை தடுக்கும் பொருட்டு 27.06.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், மலுமிச்சம்பட்டி ஊராட்சியில் இதயம் காப்போம் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த இதயம் காப்போம் திட்டத்தில் இருதய பாதுகாப்பு மருந்துகளான ஆஸ்பிரின் - 2, க்ளோபிடோக்ரல் - 4, அட்ரோவாஸ்டாட்டின் - 8, என மொத்தம் - 14 மாத்திரைகள் வழங்கப்படுகிறது. மாரடைப்பு நேரத்தில் முதல் 46 மணி நேரம் மிகமுக்கியமானது. இதற்காகத் தான் இந்த மாத்திரைகள் வழங்கப்படுகிறது.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கடந்த ஆண்டு 1021 மருத்துவ அலுவலர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதில் தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் 38 பேர் ஒதுக்கப்பட்டுள்ளனர். இந்தாண்டு (26.02.2025) புதிய மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டவர்கள் - 2642 பேர். இதில், தூத்துக்குடி மாவட்டத்தில் - 85 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 17.12.2023, 18.12.2023 ஆகிய தேதிகளில் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் ஏற்பட்ட கனமழையின் காரணமாக பல இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதில் ஏரல் டவுன் பஞ்சாயத்து முழுவதும் வெள்ளத்தில் மூழ்கியது. அதில் ஏரல் சமுதாய நல மையம் உள்ளேயும் வெள்ள நீர் புகுந்தது. 18.12.2023 அன்று 24 வயதுடைய ரம்யா என்ற கர்ப்பினி பெண் தலைபிரசவத்திற்காக பண்டாரவிளையிலிருந்து ஏரலுக்கு வந்தார். ரம்யா குறைந்த எடை மற்றும் குறைந்த உயரமுள்ள சிக்கலான கர்ப்பினி பெண் ஆவார். இவரை ஏரல் செவிலியர் ஜெயலெட்சுமி பிரசவ அறைக்குள் பிரசவத்திற்காக அனுமதித்தார். மாலை 5.30 மணிக்கு ரம்யாவிற்கு பிரசவ வலி ஏற்பட்டது. ஆனால் பிரசவ அறையில் வெள்ள நீர் செவிலியர் கணுக்கால் அளவு இருந்தது, ஆனால் சிறிது சிறிதாக நீர் மட்டம் உயர்ந்து கொண்டே இருந்தது. ஜெனரேட்டர் மற்றும் மின்சார சேமிப்பு சாதனமும் (Inverter) வெள்ள நீரினால் செயல் இழந்தது.

அந்த பிரசவ அறை முழுவதும் மின்சாரம் இருள் சூழ்ந்து இருந்தது. அப்பொழுது மருத்துவமனை பல்நோக்கு பணியாளர் பிராட்டியம்மாள் வாத்தல் அடிக்க அந்த சிறிய வெளிச்சத்தின் உதவியுடன் நமது செவிலியர் ஜெயலெட்சுமி பிரசவம் பார்த்தார். சரியாக இரவு 7.09 மணிக்கு 2.200 கிலோ எடையுள்ள ஆண் குழந்தை சுக பிரசவத்தில் பிறந்தது. இந்த சவாலான பிரசவத்தை திறம்பட செவிலியர் ஜெயலெட்சுமி நிகழ்த்தினார். செவிலியர் ஜெயலெட்சுமி மற்றும் பல்நோக்கு மருத்துவ பணியாளர் பிராட்டியம்மாளும் பிரசவத்திற்கு பின்பு ஸ்டெச்சரில் வைத்து வெள்ள நீருக்கு இடையில் தாயையும் சேயையும் பத்திரமாக பிரசவத்திற்கு பின் உள்ள கவனிப்பு அறைக்கு மாற்றினார்கள். பின்பு, வெள்ள நீரில் இருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக உயர்த்தப்பட்ட கட்டிலில் படுக்க வைத்தனர், இந்த பெரு வெள்ள பெருக்கின் அசாதாரண சூழுலில் செவிலியர் ஜெயலெட்சுமி மற்றும் பல்நோக்கு மருத்துவ பணியாளர் பிராட்டியம்மாள் ஆகியோர் சிக்கலான பிரசவத்தை மிக திறம்பட சுகப் பிரசவமாக நிகழ்த்திய இந்த சேவைக்கு பொது சுகாதார துறையின் அர்ப்பணிப்பு மிகுந்த சேவைக்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும். இவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் இன்று பாராட்டு சான்றிதழ்கள், கை கடிகாரம் வழங்கி கௌரவித்துள்ளார்கள் என அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி செ.அமிர்தராஜ், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, மேயர் திரு.பெ.ஜெகன், கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி செல்வி ஆர்.ஐஸ்வர்யா, மாவட்ட சுகாதார அலுவலர்கள் மரு.ம.யாழினி (தூத்துக்குடி), மரு.வித்யா விஸ்வநாதன் (கோவில்பட்டி), இயக்குநர் அஸ்வினி பிஷ்ஷிங் பிரைவேட் லிமிடெட், எஸ்.கே.ஆறுமுகசாமி மற்றும் அரசு அலுவலர்கள் பொதுமக்கள் பலர்கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில், விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் இரத்ததான முகாமை வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி துவக்கி வைத்தார். இரத்தான முகாமை தலைமையேற்று 720 நபர்களுடன் விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் முதல் இரத்த தானத்தை வழங்கினார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா. இளந்திரையன், தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் திருவக்கரை பாஸ்கர், ஒன்றிய கழக செயலாளர்கள் பி.தெய்வசிகாமணி, க.மும்மூர்த்தி, வி.ஜி.பிரபாகரன், கு.செல்வமணி, கே.எஸ்.இராஜி, பி.கே.டி.முரளி, கணேசன், வளவனூர் பேரூராட்சி செயலாளர் பா.ஜீவா, பொதுக்குழு உறுப்பினர்கள் என்.பஞ்சநாதன், டி.என்.ஜே.சம்பத், ஒன்றிய குழு பெருந்தலைவர் இ. சச்சிதானந்தம், மாவட்ட கவுன்சிலர்கள் சீனு செல்வரங்கன், இரா.கேசவன், ஹரிராமன், முன்னாள் ஒன்றிய குழு பெருந்தலைவர் வி.எம்.ஆர்.சிவா மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.





கழக தலைவர் , முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாள் முன்னிட்டு இராணிப்பேட்டை விஸ்வாஸ் பள்ளியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி மற்றும் விஸ்வாஸ் பள்ளி தலைவர் கமலா காந்தி. ஆகியோர் ஊனமுற்ற குழந்தைகளோடு கேக் வெட்டி அறுசுவை உணவு வழங்கினார்கள். இதில் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், Dr.இராஜேஸ்வரி திருமதி.ஷீலா வினோத் காந்தி, மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தர மூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.சிவானந்தம், துரை, மஸ்தான், குமுதா, குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அ.அசோகன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, நகரச் செயலாளர்கள் பி.பூங்காவனம், எம்.கோபி, பேரூர் செயலாளர் பெரியசாமி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத், மாவட்டப் பிரதிநிதி எஸ்.கிருஷ்ணன், நகர துணை செயலாளர்கள் ஏர்டெல் குமார், வையாபுரி நகர பொருளாளர் ஏ.அமீத் நகர மன்ற தலைவர்கள் சுஜாதா வினோத் ஹரிணி தில்லை, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பவானி வடிவேலு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் யுவராஜா மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.

## தமிழ்நாடு மின்கழக தொ.மு.ச. சார்பில்

# கழகத் தலைவர் - முதல்வர் பிறந்த நாளையொட்டி நலஉதவிகள்!

## பா.மணிமாறன் – நிர்வாகிகள் வழங்கினர்!

சென்னை, மார்ச்.6-

தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சார்பாக தமிழ்நாடு முழுவதும் திராவிட மாடல் முதலமைச்சர் - தளபதி அவர்களின் பிறந்த நாளையொட்டி நலஉதவிகள் வழங்கப்பட்டன.

இதுகுறித்து மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க பொதுச்செயலாளர் பா. மணிமாறன் அறிக்கை வருமாறு :-

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் அலுவலர்கள் மற்றும் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் என 2 இலட்சம் நபர்களின் குடும்பத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்திய முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஏழை, எளியோர்களுக்கு, நலத்திட்ட உதவிகள், அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி தமிழ்நாடு முழுவதும் மின்கழகத்தொமுச சார்பாக நடைபெற்றது.

மார்ச்1 தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கும், திராவிட மாடல் முதலமைச்சர் அன்புத் தளபதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அண்ணா சாலையில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்கள், பொறியாளர்கள் அலுவலர்களுக்கு மற்றும் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் உள்ள தூய்மை பணியாளர்கள், காவல் பணியாளர்கள், சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள், பொதுமக்கள் என 300 நபர்களுக்கு ரூ.1500/ மதிப்புள்ள சமையலுக்கு தேவையான தரமான அரிசி மற்றும் மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு பைகளில் நல உதவிகள் வழங்கப்பட்டது. மதியம் சுமார் 500 பேர்களுக்கு சுவையான அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

2021ம் ஆண்டு, மே மாதம் 7ம் நாள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பு ஏற்று கழகத்தலைவர் அன்புத்தளபதி அவர்கள், அப்போது நம்மை சூழ்ந்திருந்த கொரானா நோயின் தாக்கத்திலிருந்து நம்மை காப்பாற்றினார்கள். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு வரலாறு காணாத ஊதிய உயர்வு, பணிபுரிகிறவர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் பாதுகாப்பு வழங்கிய முத்தரப்பு ஒப்பந்தம், அகவிலைப்படி உயர்வு, கருணைத் தொகையுடன் போனஸ், அதிகாரிகளுக்கு பொங்கல்பரிசு, என எண்ணற்ற சலுகைகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர செய்தார்கள்.

மகளிர்களுக்கு விடியல் பேருந்து பயணம், பள்ளி குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், "இல்லம் தேடி கல்வித் திட்டம்", புதுமைப்பெண் திட்டம், முதல்வர் மருந்தகம், நான் முதல்வன் திட்டம், எல்லாவற்றிற்கும் மணிமகுடமா திகழும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், என பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

கடந்த அதிமுக ஆட்சியில், பொதுமக்கள் நலனில் சிறிதும் அக்கரையின்றி வீட்டுமனை பட்டா வழங்குவதை தவிர்த்த நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்களை தமிழ்நாட்டில் 86000 ஏழை, எளிய மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க அமைச்சரவையில் ஒப்புதல் வழங்கி, தமிழ்நாட்டு மக்களுக்கு பட்டா அளித்து மகிழ்ச்சி அடையச்செய்து, தமிழ்நாட்டு அனைத்து பிரிவு மக்களின் நலன் பாதுகாக்கும் அரசு என நிருப்பித்துள்ளார். நமது முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்கள், என மின்கழகத்தொமுச பொதுச்செயலாளர் மணிமாறன் தொழிலாளர்கள் மத்தியில் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாநில துணைப்பொதுச்செயலாளர்கள்: கடலூர் கே.வேல்முருகன், சேலம் குமணிகண்டன், மாநில பொருளாளர் தே.மெய்ஞான மூர்த்தி, முதன்மைச்செயலாளர் தே.முரளிகுமார், வட்டாரச் செயலாளர் எம்.பாஸ்கரன், வெளியீட்டுச்செயலாளர் மு.சடாச்சரம், தலைமை அலுவலக முன்னாள் தலைவர் எ. எம்.சதீஷ்குமார்.

கடலூர் மின்பகிர்மான வட்டம்: கண்ணன், மாநில பிரச்சார செயலாளர், பி.மணி, திட்ட இணைச்செயலாளர், ஆர்.ஸ்ரீதர், கோட்ட அமைப்பு செயலாளர், பி.துளசிநாத், திட்ட அமைப்பு செயலாளர், கே.ரமேஷ், கிளைச்செயலாளர், எம்.கோபு, திட்ட அமைப்பு செயலாளர்.

சேலம் மின் திட்டம்: வே. நெடுஞ்செழியன், திட்டப் பொருளாளர், ச.பொன்செல்வம், திட்ட அமைப்புச்செயலாளர், வி.சரவணன், மேற்கு கோட்டச்செயலாளர்.

சென்னை தெற்கு I : கே.விநாயகமூர்த்தி, திட்டச் செயலாளர், ஆர்.தனசேகரன், துணைச்செயலாளர், சி.சிவகுமார், கிளைச்செயலாளர், பி.தனபால், கிளைச்செயலாளர்.

சென்னை மேற்கு திட்டம்: 1. பிரேம் ஆனந், திட்ட துணை செயலாளர், டி.சுகுமாறன், திட்டத்துணை செயலாளர், ஆவடி கோட்டச்செயலாளர், டி.ரஞ்சன்குமார், எம்.உதயகுமார், அமைப்புச்செயலாளர்.

சென்னை வடக்கு ஏ.பாபுராஜ், கோட்டச்செயலாளர், பி.வி.எஸ்.ராஜன், டி.தேசிங்கு கோட்டத்தலைவர், பசுபதி, சுந்தர், நேதாஜி, பாபு ராமமூர்த்தி, மலைச்செல்வி.

தலைமை அலுவலகம் : எம். சிவகுமார், சுரேஷ், மோகன் ராஜ், தியாகு, ஆல்பர்ட், சிலம்பரசன், உதயா, மதி, தினேஷ்.

சென்னை நடுவண் : ராயபுரம் ராஜேந்திரன், திட்டச்சிறப்புத்தலைவர், தனசேகரன், திட்டத்தலைவர், முருகன், கோட்டச் செயலாளர் (எழும்பூர்), மகேஷ், அண்ணாசலை கோட்டம், ராஜ்குமார், அண்ணா சாலை கோட்டம்.

தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலகம் : பாலசுப்பிரமணி, தமிழரசி, மஞ்சுளா சத்தியநாராயணன், அன்பழகன், ரவி, சந்திரா.

செயலகக்கிளை : சாம்சன், ஜனாதன், விக்னேஷ்வரன், சுந்தர் ஆகியோர்கள் கலந்துக் கொண்டார்கள்.

## எம்.ரமணிமாதவன் தலைமை! நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை!

# மதுரவாயல் 147வது வட்டத்தில் புதிய சமுதாய நலக்கூடம்!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டுகிறார்! மேட்டுக்குப்பம் எஸ்.ஜி.மாதவன் அறிக்கை!

சென்னை, மார்ச். 6

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின் பேரில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழகப் பொருளாளர், மாநிலங்களவைக் கழகக் குழுத் தலைவர், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் வழிகாட்டுதல்படி, சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வார்டுக்கு உட்பட்ட, ஆலப்பாக்கம், கங்கை அம்மன் கோவில் தெரு, பழைய தாலுக்கா அலுவலகம் உள்ள இடத்தில் இன்று (06.03.2025 வியாழக்கிழமை) காலை 9.30 மணிக்கு, புதிய சமுதாய நலக்கூடம் கட்டிடம் அடிக்கல் நாட்டு விழா நடைபெறுகிறது.

இவ்விழாவில் 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர், கல்வி நிலைக்குழு உறுப்பினர் எம்.ரமணிமாதவன் தலைமையில் வளசரவாக்கம் 11 வது மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் சென்னை பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி அடிக்கல் நாட்டுகிறார்.

ஆகவே நமது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர், பொதுமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 147 வது வட்டக் கழகச் செயலாளர் மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## எழும்பூர் தொகுதி - முதலமைச்சர் பிறந்த நாள் விழா!

# 350 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, மார்ச்.6-

தமிழ்நாட்டின் உரிமைகளைக் காத்து நிற்கும் களப் போராளி முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை எளியோருக்கு உதவிடும் வகையில் கொண்டாடும்விதமாக, எழும்பூர் தொகுதி, வார்டு எண்.99, நேரு பார்க் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதியில் நடந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில், அக்குடியிருப்பைச் சேர்ந்த 350 குடும்பங்களுக்கு 5 கிலோ கொண்ட அரிசிப் பை, புடவை, கைலி, பெட்ஷீட், பாய் உள்ளிட்ட பொருட்களை கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான இ.பரந்தாமன் வழங்கினார்.

இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் பொருளாளர் கலையரசன், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் மா.காந்தி, மு.கமலக்கண்ணன்; 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெ.சிலம்பரசன், 108 'அ' வட்ட இளைஞரணி அமைப்பாளர் எஸ்.சதீஷ்குமார், அவைத் தலைவர் விஸ்வ நாதன், மாவட்ட தொ.மு.ச. அமைப்பாளர் சிம்பு எஸ்.பிரதாப்குமார், எழும்பூர் வடக்குப் பகுதி மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜெயலெட்சுமி,

முனாப், 58 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எல்.சுகுமாரன், தேவநிதி, ஜெ. சரவணன், கண்ணன், சுரேஷ் பாபு, எட்டு என்கிற விஜயகுமார், புஷ்பராஜ், ஜெ.எல்.குணசேகரன், பாக முகவர் கவிதா, பிரம்மதேவன், கார்த்திகேயன், கோவிந்தன், இருதயராஜ், பாண்டியன், ஏழுமலை, குணா, ஜெய்சங்கர், அசினா பேகம், நாகராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், செயல்வீரர்களும் கலந்துகொண்டனர்.